Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 23-2-1946 மாசிமீ 12உ { மலர் 20

## இராமாயணமும், கந்தபுராணமும்.

(மணியம்மை)

இராமாயணமும், கந்தபுராணமும் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகுமென்றும், இரண்டிற்கும் உற்பத்தி, காரணம் இவைகளில் உள்ள ஒற்றுமைகளை விளக்கியும் 8-7-44ந் தேதி 'குடி அரசு' இதழில் கூறப்பட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக இதை வெளியிடுகிறோம்.

★

| | |
|---|---|
| 26. சூர்ப்பனகை உற்றார் உறவினரை ஒலமிட்டு அழைத்தாள். | 26. அசமுகி உற்றார் உறவினரை நினைந்து ஒலமிட்டாள். |
| 27. சூர்ப்பனகை "வெள்ளிமாமலை அசைத்த மன்னவா! என் மூக்கறுத்த பகைவனை நோக்காயா!" என்று இராவணனிடம் ஒலமிட்டாள். | 27. அசமுகி "கதிரவனை சிறைசெய்த மன்னாவோ! மன்னாவோ யான்பட்ட குறையினை அறியாயோ!" என்று சூரனிடம் அழுதாள். |
| 28. சூர்ப்பனகை "யான் அடைந்த அவமானத்திற்கு பழி வாங்க வாராயா" என்று அழுதாள். | 28. அசமுகி சூரனிடம் "பழிபூண்டு நின்றாயே" என்று அழுதாள். |
| 29. சூர்ப்பனகை அழுதுகொண்டு ராவணன் சபை புகுந்தாள். | 29. அசமுகி சூரன் சபை புகுந்தாள். |
| 30. இராவணன் கோபம்கொண்டு வருந்தி சீதையை அடையக்கருதினான், துணிந்துவிட்டான். | 30. சூரன்கோபம்கொண்டு மனம் கொதித்து இந்திராணியை அடையக் கருதினான். |
| 31. சீதையை தூக்கிவந்து சிறைவைத்தான். | 31. இந்திராணி ஒளிந்துகொண்டதால் அவள் மகன் சயந்தனையும், சுற்றத்தார்களையும் சிறைசெய்தான். |
| 32. சீதை சிறையில் வாடிவதங்கி அழுதாள். | 32. சயந்தன் சிறையில் வாடி அழுதான். |
| 33. சீதை சிறையில் இராமன் வந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எண்ணினாள். | 33. சயந்தன், கடவுள் வந்து தன்னை விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினான். |
| 34. சீதை, அழுது எண்ணியதால் இராமன் விற்படை இலங்கைக்கு வந்தது. | 34. சயந்தன் எண்ணி அழுததால் வீரமகேந்திரத்திற்கு வேற்படை வந்தது. |
| 35; இராம தூதனாக அனுமான் இலங்கை வந்தான். | 35. முருகத் தூதனாகிய வீரவாகு வீரமகேந்திரம் வந்தான். |
| 36. இலங்கை, வீரர்களாலும், சூரர்களாலும், கனல் கக்கும் கண்ணர்களாலும் நிறைந்திருந்தது. இலங்கையில் பசி இல்லை, ஏழை இல்லை, பிணி இல்லை, கவலை இல்லை. | 36. வீரமகேந்திரத்தில் உள்ளவர் வரத்தினில் பெரியர், வன்மையில் பெரியர், உரத்தினில் பெரியர். அங்கு வீரமகேந்திரத்தில் நலிந்து, மெலிந்து, நரை திரை கொண்டு பசி கொண்டவர் இல்லை. |
| 37. இலங்கையில் வானவர் பணிந்து பணிசெய்தனர், காவல் காத்தனர், பணியாளராய் நின்றனர். இதை அனுமான் பார்த்தான். | 37. வீரமகேந்திரத்தில் வானவர் வணங்கி ஏவல் புரிந்தனர். மீன் கொண்டுவந்து கொடுத்தார்கள். |
| 38. இராவணனது பெருமையையும், அவனது தவத்தையும் அனுமான் வியந்து போற்றினான். | 38. சூரனின் தவத்தின் பெருமையை வீரவாகு வியந்து புகழ்ந்தான். |
| 39. அனுமான், சீதை சிறை இருந்த அசோகவனம் சென்று சீதையைக் கண்டு அவள் சோகத்தைத் தேற்றினான். | 39. வீரவாகு, சயந்தன் சிறை இருந்த இடம் சென்று, அவனைத் தேற்றினான். |
| 40. அனுமான் ராவணன் முன் அழைத்துச் செல்லப்பட்டான். | 40. வீரவாகு சூரன் முன் சென்றான். |
| 41. அங்கே ராமன் பெருமையைச் சொல்லுகிறான். | 41. அங்கே முருகன் பெருமையைச் சொல்லுகிறான். |
| 42. அனுமான், இராவணனிடம் ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளே இராமனாய்த் தோன்றினான் என்கிறான். | 42. வீரவாகு தன்னிகரில்லா இறைவனே முருகனாகத் தோன்றினான் என்று சொல்லுகிறான். |
| 43. அனுமான் சொன்னது இராவணன் செவியில் ஏறவில்லை. | 43. வீரவாகு சொன்னது சூரன் செவியில் ஏறவில்லை. |
| 44. அனுமான், "உன்செல் | 44. வீரவாகு "[illegible] |

| | |
|---|---|
| ...வம் சிதையாமல், உன் வாழ்வு குலையாமல் இருக்கவேண்டுமானால் சீதையை விட்டுவிடு" என்று இராவணனுக்குச் சொன்னான். | ...யோடு நீ நெடிது வாழவேண்டுமானால் வானவரைச் சிறையினின்று விடுக, ஆறுமுகன் அடி பணிக" என்று சூரனுக்குச் சொன்னான். |
| 45. அனுமான் இலங்கையை எரித்தான். | 45. வீரவாகு வீரமகேந்திர நகரை அழித்தான். |
| 46. அனுமான் அரக்க வீரரை அடித்தபின் ராமனிடம் சென்றான். | 46. வீரவாகு, அசுரன் சேனையை சிதைத்தபின் அதை விட்டுச் சென்றான். |
| 47. இராவணன் மந்திர சபை கூட்டினான், அனுமான் செய்ததை எடுத்துரைத்து வருந்தினான். | 47. சூரன் மந்திரசபை கூட்டினான். வீரவாகுவின் ஜெயத்தை மந்திரிகளுக்குச் சொல்லி வருகிறான். |
| 48. இராவணன் சேனைக் காவலன் மகோதரன் எழுந்து வீரம் பேசினான். | 48. சூரனின் ஆட்களான காலசித்தனும் சூரனின் மகனாகிய பானுகோபனும் வீரம் பேசினார்கள். |
| 49. இராவணன் மகிழ்ச்சியும், வீரமும் கொள்கிறான். | 49. சூரன் மகிழ்ந்து ஊக்கம் கொள்கிறான். |
| 50. இராவணன் தம்பி விபீஷணன் எழுந்து இராவணனுக்கு புத்திகூறுகிறான். | 50. சூரன் தம்பியாகிய சிங்கமுகன் சூரனுக்கு புத்தி கூறுகிறான். |
| 51. இராமன் கடவுள் என்றும், "நீ வாழவேண்டுமானால் சீதையை விட்டுவிடு" என்றும் விபீஷணன் கூறுகிறான். | 51. சிங்கமுகன், முருகன் ஆதிபரம்பொருளென்றும், "நீ வாழ வேண்டுமாயின் வானவரைவிட்டுவிடு" என்றும்சொல்லுகிறான். |
| 52. இராவணன் எதிரியைப் புகழ்ந்த விபீஷணனைக் கடிகிறான். | 52. சூரன் எதிரியைப் புகழ்ந்த சிங்கமுகனை வெறுக்கிறான். |
| 53. இராவணன், இராமனை ஏளனம் பேசி இழிவுபடுத்திச் சொல்லுகிறான். | 53. சூரன், சுப்பிரமணியனை ஏளனம் பேசி அலட்சியமாய்க் கருதிச் சொல்லுகிறான். |
| 54. இராவணன், விபீஷணன்மீது குற்றஞ்சாட்டி திட்டுகிறான். | 54. சூரன் வீரவாகுமீது குற்றம்சாட்டி திட்டுகிறான். |
| 55, 56. விபீஷணன் வருந்தி, நாட்டைவிட்டகலுகிறான். | 55, 56. சிங்கமுகன் வருந்தி, நாட்டைவிட்டகலுகிறான். |
| 57, 58. போர் நடக்கிறது முதல நாள் போரில் இராவணன் தோற்று மீளுகிறான். | 57, 58. போர் நடக்கிறது. முதல்நாள் போரில் சூரன்மகன் பானுகோபன் தோற்று மீளுகிறான். |
| 59. இராமன் இராவணனை "இன்றுபோய் நாளை வா" என்கிறான். | 59. முருகன் பானுகோபனை "இன்று உன்னைப்போக விடுகிறேன்" என்கிறான். |
| 60. இராமன் இராவணனை "இப்பொழுதாவது சீதையை விடுத்து பிழைத்துப்போ" என்று எச்சரிக்கிறான். | 60. முருகன் இரண்டாம் நாள்போரில் சூரனை "இப்போதாவது வானவரை விடுத்தால் உயிர்வாழ்வாய் இல்லையெனில் மடிவாய்" என்று எச்சரிக்கிறான். |
| 61. இராவணன் மறுமொழி கூறாது அரண்மனை சென்றான். | 61. சூரன் மறுமொழி கூறாது அரண்மனை அடைந்தான். |
| 62. இந்திரஜித்தன் போருக்குச் சென்று தோல்வி அடைந்து தந்தை இடம் வந்து இராமனை வெல்லமுடியாது, சீதையை விட்டுவிடு உயிர்வாழ்வோம் என்கிறான். | 62. பானுகோபன் போரில் தோற்று, தந்தை இடம் வந்து வானவரை விட்டுவிட்டு உயிர் வாழலாம் என்கிறான். |
| 63. இராவணன், மகன் மீது கோபம்கொண்டு உயிரை விடுவேனேஒழிய சீதையை விட முடியாது. மானம் பெரிதே ஒழிய உயிர் பெரிதல்ல என்கிறான். | 63. சூரன் மகன்மீது கோபித்து, உயிர்விட்டாலும் விடுவேன், வானவரைவிட்டு வசைக்காளாகி வாழமாட்டேன் என்கிறான். |
| 64. இராவணன் மகன் இந்திரஜித்தன், கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்று கருதி லக்குவனோடு போர்தொடுத்து மாண்டான். | 64. சூரன் மகன் பானுகோபன் போருக்குச்சென்று மடிகிறான். |
| 65. இராவணன், இராமனுடன் போரிட்டு மடிந்தான். | 65. சூரன் முருகனுடன் போரிட்டு மடிந்தான். |
| 66, அவன் மனைவி மண்டோதரி புலம்பி உடன்கட்டை ஏறினாள். | 66. அவன் மனைவி பதுமை புலம்பி உடன்கட்டைஏறினாள். |

(தொடரும்)

## புலிவலத்தில் திராவிட உணர்ச்சி!

திருவாரூரையடுத்த புலிவலத்தில் 20-1-46ல் காங்கரஸ் தோழர்கள் நேத்தாஜி விழா கொண்டாடுவதற்கு ஏற்பாடுசெய்து திராவிடர் கழகத்தினரின் வீட்டு வாயில்களில் நின்றுகொண்டு "துரோகிகள், பேடிகள், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள்" என்று கூச்சல் போட்டார்கள். வீறு கொண்ட நமது தோழர்கள் அமைதியான முறையில் அன்றையதினமே வேறொரு தெருவில் திராவிடர் கூட்டம் கூட்டி "யார் பேடிகள்?" என்பதைப் பற்றி ஆணித்தரமான விரிவுரையாற்றினார்கள். கூட்டத்தின் அமைதியைக் கலக்க தேசியத் தோழர்கள் மேளவாத்தியம், ஜேகோஷம், ஊர்வலம் முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்தும் திராவிடர் கூட்டம் அமைதியாகவும் ஆவேச உணர்ச்சியோடும் நடைபெற்றது. தோழர் என். சண்முகம் தலைமையில் தோழர்கள் வி. சி. ரங்கராசு, ராமு, வேதையா, ராசு, யாகூப், தியாகராசன், சோமு, மு. கருணாநிதி மற்றும் பலர் பேசினார்கள். சு. ராமநாதன் 'இன்னும் என்ன செய்யப்போறிங்க' பாடல் பாடினார். புலிவலத்தின் புத்துணர்ச்சி வாழ்க!

---

ராசிபுரம் சைனீக வாலிபர் பகுத்தறிவு சங்க பொதுக் கூட்டம் 4-2-46ல் நடைபெற்று தோழர்கள் பழனிசாமி, ஆர். ராமசாமி, வி., கிருஷ்ணசெட்டி, ஆகியோர் பேசினர்.

## வேண்டுகோள்

தோழர்களே!

சோழங்க நல்லூரில் 3-3-46ல் நடைபெறும் திருச்சி ஜில்லா திராவிடர் கழக 17-வது மாநாட்டில் சுமார் 1000 பேருக்கு மட்டுமே உணவு தயாரிக்கப்படுகிறது. உணவுக்கான சீட்டுக்கு 4 அணா கொடுத்து முன்னமேயே கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட் வாங்கிக் கொள்ள வேண்டும்.

(1) தி. பொ. வேதாசலம்
(2) ரெங்கையா 'செல்வம் மளிகை' திருச்சி
(3) கே. கே. சாமி சின்ன கடை வீதி திருச்சி
(4) ஆர். சுலைமான் உறையூர்

ரோஜா முத்தையா

# அன்னக்காவடிகள்தான்! ஆனால் அரசியல் அமைக்கத்தெரியும்

(தென்சென்னை (4-வது பகுதி) திராவிடர் 1-வது மாநாடு மயிலாப்பூர் கபாலி டாக்கீசில் 10-2-46ல் நிகழ்வுற்றபோது தலைமை வகித்த தோழர் C. D. T. அரசு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சென்றவாரத் தொடர்ச்சி)

★

காங்கரஸிலிருந்துகொண்டே, வடநாட்டிற்கு ஒருவிதமான தொடர்பும், வடநாட்டு ஆதிக்கமும் திராவிடத்தில் இல்லாமல் செய்துவிடுங்கள். அப்பொழுது பன்முறை எங்கள் தலைவர் பெரியார் அவர்கள் சொன்னதைப்போல நாங்களும், எங்களுடைய தலைவரும் உங்களுடைய திராவிட நாட்டு காங்கரசிலே சேர்ந்து திராவிட நாட்டு விடுதலைக்கு உழைக்கத் தயார்.

இயலாதுபோனால், நீங்கள் எல்லோரும் காங்கரசை விட்டு எங்கள் திராவிட இயக்கத்தில் சேர்ந்து திராவிட நாட்டுப் பிரிவினைக்கு வேலை செய்யுங்கள். இது இரண்டும் செய்வதற்கு உங்களுக்கு உறுதியோ, அல்லது திடமோ இல்லாவிட்டால் தயவுசெய்து, நாங்கள் செய்யும் வேலையில் குறுக்கிடாமல், தொல்லை கொடுக்காமல், எங்கள் வேலையை நாங்கள் செய்து முடிக்கும்வரை சற்று ஒதுங்கி நில்லுங்கள் எங்களுக்கு உறுதி உண்டு; உள்ளம் உண்டு; ஊக்கம் உண்டு. உங்களனைவரையும் ஆரிய சூழ்ச்சியிலிருந்து மீட்க வழிகளையும், திட்டங்களையும் தீட்ட எங்கள் தலைவர் பெரியார் அவர்களும், தளபதி அண்ணாதுரை அவர்களும், தன்னலமற்ற தொண்டுசெய்ய தன்மானமுள்ள தோழர்களும் உண்டு என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்களே! திராவிட நாட்டுப் பிரிவினை, நமது இயக்கத்தின் இன்றைய நிலை, நமது வேலை, திராவிடத்தின் அமைப்பு என இன்னோரன்ன சில பலவற்றைப்பற்றி சுருக்கமாகக் கூற ஆசைப்படுகிறேன்.

நமது இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, இடையில் ஏற்பட்ட வீழ்ச்சி 1938க்குமேல் கண்ட மறுமலர்ச்சி இவையாவும் நீங்கள் அறிந்ததே, காலஞ்சென்ற தலைவர்கள் நாயர், தியாகராயர் முதலியவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, பல ஆண்டுகள் அரசியல் அமைத்து நடத்திவந்தது. பின்னர் போலிகளும், சுயநலக்காரர்களும் செய்த துரோகத்தால் நாதியற்று நடுத்தெருவில் கிடந்தது. அந்நிலையில் தன்மான இயக்கத் தந்தை நம் பெரியார் எடுத்து புத்துயிர் தந்தார் 1938ல். 1939க்குமேல் நம் இயக்கத்தின் வளர்ச்சி விறுவிறுப்பாகவும், வேகமாகவும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். காலத்திற்கேற்ற, நிலைக்கும் தேவைக்கும் ஏற்ற கருத்துக்களை ஏற்று கழகத்தை திருத்தி அமைத்து வேலை நடந்துவருகிறது. நாம் "இந்துக்கள்" அல்ல, திராவிடர்கள். நமக்கு தனி அரசு வேண்டும். திராவிடம் தனி நாடாகப் பிரியவேண்டும் என்ற புதுக் கருத்துக்களும் அவைகளுக்கான வேலைத் திட்டங்களும் இன்றைய கூறுகள்.

நாம் தேர்தல்களில் நிற்கக்கூடாது என்று தீர்மானம் செய்தது, தேர்தல்களில் கையாளப்படும் முறைகள் சரியானவை அல்ல; இன்றிருக்கும் வாக்குரிமை ரீதிப்படி திராவிடர்களுக்கு அதிகமான ஓட்டுகள் இல்லை, தேர்தல் முறைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்கிற எண்ணத்தினால் தானேயன்றி மற்றபடி வேறு எதற்குமில்லை. மேலும் நம்முடைய எதிர்ப்பைக் காண்பிப்பதற்காக நாம் தேர்தலில் நிற்கக்கூடாது என்பது மட்டுமல்ல, கலந்துகொள்ளவும் கூடாது என்று சொல்லுகிறோம். இதைப்பற்றி, அதிக விரிவாக பல ஊர்களிலே நமது தலைவர் பெரியார் அவர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

ஆகவே, இன்று நம்முடைய இயக்கமானது மக்கள் இயக்கமாக மாறிவிட்டது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இத்தனை ஆண்டுகளாக இயக்கக் கொள்கைகளுக்கு மதிப்பு கொடுக்காமல், இயக்கத்திலிருந்த சிலர் தங்களுடைய சுயவாழ்வுக்குத் தக்கபடி திட்டங்களும், தீர்மானங்களும் செய்துகொண்டு வந்தார்களேயன்றி, இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளைக் காற்றில் விட்டுவிட்டு, கவலையில்லாமல், உண்மைத் தோழர்களின் உழைப்பிலே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த நிலைமை இன்று மாறிவிட்டது. ஆகவேதான் நான் மேலே சொன்னபடி இயக்கமும், இயக்கத்தின் அங்கத்தினர்களும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு, ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்க முடியாத நல்ல நிலைமையில் இன்று நமது இயக்கம் இருக்கிறது. நாம், பட்டக்காரர்கள் அல்ல, பதவிக்காரர்கள் அல்ல, பணக்காரர்களுமில்லை. ஆனால் உணர்ச்சியுள்ள, ஊக்கமுள்ள, உண்மையுள்ள 50,000 உயிர்களை என்றைக்கும், எந்த வேளையிலும் இயக்கத்திற்காக இழக்கத் தயாராயிருக்கும் அங்கத்தினர்களைக் கொண்ட இயக்கமாயிருக்கிறது. ஆம்; நாம் அன்னக் காவடிகள்தான்! ஆனால் அன்னக்காவடிகளுக்கு அரசியல் அமைக்கத் தெரியும், அரசாளத் தெரியும் என்று அதிக பெருமையுடன், உங்கள் சார்பாக, நாட்டிற்கும், நம்மைவிட்டுப் பிரிந்த திராவிடத் தோழர்களுக்கும், திராவிடராய் வாழாமல் சுயநலம் கருதி, மானமிழந்து, மதியற்று இருந்துவரும் திராவிடர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்குச் சரித்திர சான்றுகளும் உண்டு என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். துருக்கியைத் துவங்கச் செய்த முஸ்தபா கமால்பாட்சா ஒரு சாதாரண சிப்பாய், அன்னக்காவடிதான். ரஷ்ய நாட்டில் சமதர்மத்தை நிலைநாட்டிய லெனின் ஒரு அன்னக்காவடிதான்—அதை மேலும் தொடர்ந்து நடத்திவரும் தோழர் ஸ்டாலின் ஒரு செருப்பு தயாரிக்கும் அன்னக்காவடிதான். ஏன், அன்று நம் தளபதி அண்ணா நடித்துக்காட்டிய சிவாஜி நாடகத்தின், கதைத்தலைவன். திராவிட சிவாஜியும் ஒரு அன்னக்காவடிதான்: இன்னும் நம்முடைய இயக்கத்திலே எடுத்துக்கொண்டாலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வெற்றிபெற நடத்தி வெற்றிபெற்றதும் அன்னக்காவடிகள்தான். பட்டக்காரர்கள் அல்ல, பணக்காரர்கள் அல்ல, அல்லது பதவிக்காரர்கள் அல்ல. ஆகவேதான், நாம் அன்னக்காவடிகளாயிருந்தாலும், திராவிடத் தனி அரசு அமைக்க முடியும் என்று சொன்னேன். இப்போது வேண்டுவது உங்களுடைய உழைப்பு. நமக்கு மற்றவர்களுடைய தயவோ, அல்லது கருணையோ தேவையில்லை. வடநாட்டாருடைய "வார்சு" நமக்குத் தேவையில்லை. வெள்ளையனை நாம் வேண்ட வேண்டியதுமில்லை, இனி நமக்குத் தெரியும், திராவிடநாட்டை எப்படிப் பெறவேண்டுமென்று. முதலில் திராவிடநாட்டின் பிரிவினைபற்றி எண்ணி இருந்தோம் பேசி வந்தோம். பயன் காணவில்லை. நாமே, நமது முயற்சியிலும் உழைப்பாலும் அமைக்க வேண்டுமென்ற முடிவிற்கு இன்று வந்துள்ளோம். நாம் திராவிட நாட்டை அமைத்தே தீருவோம். ஆகவே எழுச்சி பெற்று எழுங்கள்—உணர்ச்சியும் ஊக்கமும் கொண்டு உழையுங்கள். திராவிடரின் வலிமை வெள்ளை ஆரியரும், மஞ்சள் ஆரியரும் அறிவர். வெள்ளையர்கள், இன்று இல்லாவிட்டால் நாளைக்கு இந்தியாவுக்கு விடுதலை கொடுக்கும் நிலைமையில் இப்போது இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய இனத்தா

## தோழர் திராவிடமணிக்குப் பாராட்டு

### பல இடங்களில் விருந்துகள்

கூடலூர் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் திராவிடர் கழகக் கூட்டுச் செயலாளராக நியமிக்கப்பட்டு ஈரோடு செல்வதை முன்னிட்டுப் பல விடங்களில் விருந்துகளும், பாராட்டுக் கூட்டங்களும் நடைபெற்றன.

o o

17-2-46 காலையில் திருப்பாப் புலியூர் தோழர் முரசழகன் அவர்கள் இல்லத்தில் விருந்து.

o o

17-2-46 பகல் 12-மணிக்கு பசிக்கல்பட்டு தோழர் வெங்கடசின்னாரெட்டியார் அவர்கள் இல்லத்தில் விருந்தும் தோழர் இரா. அன்பழகன் தலைமையில் பாராட்டுக்கூட்டமும் நடைபெற்றன.

o o

17-2-46 பகல் 4மணிக்கு கூடலூர் பகுத்தறிவு கழகத்தின் சார்பில் ஓர் தேநீர் விருந்து நடைபெற்றது. நூற்றுக்கு மேல் இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டார்கள். தோழர் சக்கரபாணி அவர்கள் இனிய தமிழிசைக் கச்சேரி நடத்தினார். தோழர் வேலு அவர்கள் தலைமையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் தோழர் ச. மணியரசன் ஓர் பாராட்டுரை வாசித்தளித்தார். தோழர்கள் வி. கே. எஸ். சண்முக சுந்தரம், காஞ்சி கலியாணசுந்தரம், சிசக்கரியா மற்றும் பலர் தோழர் திராவிடமணி அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

o o

17-2-46 பகல் 6 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் திராவிட இளைஞர் கழகச் சார்பில் ஓர் தேநீர் விருந்து சிறப்பாக நடைபெற்றது. சுமார் நூற்றைம்பது இயக்கத்தோழர்களும் நண்பர்களும் கலந்து கொண்டனர். தோழர் நமசிவாயம் அவர்கள் தலைமையில் நடந்த பாராட்டுக்கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி கலியாண சுந்தரம் இளம் பெருவழுதி, இளவழகன், மதிவாணன், இளங்கோ, வீரமணி மற்றும் பலர் தோழர் திராவிடமணி அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். தோழர் சந்தானம் அவர்கள் நன்றி கூறினார்.

o o

17-2-46 இரவு 8-மணிக்கு மாலுமியார் பேட்டை தோழர் பொ. தியாகராசன் அவர்கள் இல்லத்தில் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றன. பல இயக்கத்தோழர்கள் கலந்துகொண்டனர்.

o o

18-2-46 பகல் 12மணிக்கு கூடலூர் தோழர் இளவழகன் அவர்கள் இல்லத்தில் தோழர் திராவிடமணி அவர்களைப் பாராட்டி விருந்து நடைபெற்றது. பல தோழர்கள் கலந்துகொண்டனர்.

o o

18-2-46 பகல் 2மணிக்கு கூடலூர் புகைவண்டி நிலையத்திற்கு பல இயக்கத்தோழர்களும், நண்பர்களும் வந்திருந்து தோழர் திராவிடமணி அவர்களை வழியனுப்பினார்கள். தோழர் து. அன்பழகன் அவர்கள் மாலையணிவித்தார். தோழர்கள் அனைவரும் பெரியார் வாழ்க, திராவிடமணி வாழ்க என வாழ்த்தொலிகள் செய்தனர்.

மேற்படி பாராட்டுக் கூட்டங்களில் தோழர் திராவிடமணி அவர்கள் தக்கவாறு பதிலளித்து தோழர்களை இயக்கப் பணியில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்றும், கறுப்புச்சட்டைப் படையில் திராவிட இளைஞர்களும், மாணவர்களும் சேரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

---

## பாரதிதாசன் நிதி ஆதரவுக் கூட்டம்

13-2-46ல் சென்னை கோகலே மண்டபத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதி ஆதரவுக்கூட்டம் நடைபெற்றது. முன்னாள் மேயர் தோழர் எம். ராதா கிருஷ்ண பிள்ளை தலைமை வகித்தார்.

தோழர்கள் டாக்டர் எ. கிருஷ்ணசாமி, கம்பதாசன் செங்கல்வராயன், கி. வா. ஜகன்னாதன், பரலி சு.நெல்லையப்பர், க. அன்பழகன், மு. வரதராசன், குஞ்சிதம்-குருசாமி, சி. என். அண்ணாதுரை ஆகியோர் கவிஞரின் புலமையைப் பாராட்டிப் பேசினார்கள் நிதி திரட்டுவதற்காகக் கட்சிப்பற்றில்லாத ஒரு கமிட்டியை ஏற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.


---

ராகிய ஆரியர்களிடம்தான் ஒப்படைப்பார்கள். ஆகவே நம்முடைய நிலைமை அப்போது எப்படி இருக்கும் என்பதை நினைத்து உடனே புறப்படுங்கள், 'ஆரியத்தை வீழ்த்த! ஆரிய ஆங்கிலேய ஒப்பந்தத்தை உடைக்க, வடநாட்டாரை நாட்டைவிட்டுத் துரத்த, நம் திராவிட நாட்டுத் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைமையில் திராவிட நாட்டை அமைக்க.'

அந்தத் திராவிடத்திலே, முதலாளி, தொழிலாளி என்கிற வித்தியாசமிருக்காது; மக்கள், மாக்களாக வாழாமல் மக்களாக வாழ்வார்கள்; சனாதனம் சுக்கல் சுக்கலாக ஒடித்து எறியப்படும்; மனுநீதி—மண்ணின் கீழ் போட்டு புதைக்கப்படும்; சூத்திரன் என்று சொன்னால் சுட்டுக் கொல்லப்படும் என்கிற சட்டம் அங்கே இருக்கும். புராணமும், இராமாயண இதிகாசங்களும் மூலையில் வைக்கப்படும்; கோவில்கள் எல்லாம் கலைக்கூடங்களாக அமைக்கப்படும். மடாதிபதிகளின் மடங்கள் மாணவர் மன்றங்களாக மாற்றப்படும். சுருங்கச் சொன்னால் சமதர்ம ஆட்சி நடைபெறும் நம் திராவிடத்திலே. இப்பணியில் ஈடுபடவாரீர் என்ற அழைப்புடன் என் உரையை வணக்கத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.


இவர் என்ன சொல்லுகிறார் என்பதை கவனியுங்கள்.

(6-2-46ல் வந்த கடிதம்)



தோழர் டாக்டர் ஜெயராம் அவர்களுக்கு, தங்களின் நலமிக்க காயசுத்தி லேகியம் சாப்பிட்ட, நாலே நாளில் நல்ல குணம் தெரிந்தது. குடலை சுத்திசெய்து உடலை திடமாக்குவதிலே, தங்களின் காயசுத்தி லேகியத்திற்கு நிகரொன்றுமில்லை. ஆதலின் இன்னும் 1 சேர் V. P. P.ல் அனுப்பிவைக்கவும். வந்தனம்.

தங்கள் அன்புள்ள,
வி. எஸ். கணபதி,
பெரியதெரு, திருமல்ராஜன் பட்டினம்.

குடல், இரைப்பை கோளாறுக்கு ஒப்பற்ற சஞ்சீவி

**காயசுத்தி லேகியம்**

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

சோல் ஏஜண்டு: M. E. அப்துல் ரகிமான் சாகிபு,
பெரியகடைவீதி, திருவண்ணாமலை.

# திராவிடர் ஆட்சியில் பெரியார் உருவம் பொறித்த கொடி அமையும்

[3-2-46ல் தவுட்டுப்பாளையத்தில் நடைபெற்ற கரூர் தாலூகா திராவிடர் கழக 4-வது மாநாட்டில், கொடியேற்றுவித்த கரூர் தோழர் என். ரத்னம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு]

★

திராவிடத் தந்தை பெரியார் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இம்மாநாட்டு வரவேற்புக் கழகத்தார் என்னைக் கொடியேற்றுவிழா என்னும் போால் எனக்குக் கௌரவம் அளித்துக் கொடிசம்பந்தமாக என் கருத்துக்களைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் அளித்ததற்காக முதலாவதாக என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற கொஞ்ச காலமாகவே நமது இயக்கத்துக்குப் புதுக்கொடி ஏற்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் நம் தோழர்களிடையே பேசப்பட்டு வருவதும், சென்னையில் சென்ற 16-12-45ந் தேதி நமது கட்சி மத்திய நிர்வாகக் கமிட்டியில் கொடிப்பிரச்சினை விவாதிக்கப்பட்டதும் அதன்பேரில் சென்ற ஜனவரி மாதக் கடைசித் தேதிவரை அதுவிஷயத்தில் கவலையுள்ள இயக்கத் தோழர்கள் அவரவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டதும் நீங்கள் அனைவரும் அறிந்த விஷயமேயாகும், அத்துடன் சென்ற டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற திருவத்திபுரம் மாநாட்டுக் கொடியேற்று விழாவின்போது நமது பெரியார் அவர்கள் எடுத்துக்கூறிய முக்கிய விஷயங்கள் என்னவென்றால், கொடி காலத்திற்கேற்றாற்போல் மாற்றப்படவேண்டும், கொடி விஞ்ஞான அறிவு—லட்சியம் இவைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்; அதோடு கொடி யாரும் சர்வ சாதாரணமாகத் தயாரித்து விடக்கூடிய மாதிரியிலும் இருக்கவேண்டும்என்பவைகளாகும்.

அதற்கேற்ப பல தோழர்கள் கொடி சம்பந்தமாகத் தங்களது அபிப்பிராயங்களைக் 'குடி அரசு' காரியாலயத்துக்குத் தெரிவித்திருப்பார்கள், என்று கருதி விசாரித்தேன். ஏனென்றால் கொடி சம்பந்தமான அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு, நிர்வாகக் கமிட்டியாரால் அளிக்கப்பட்ட கெடுவு ஜனவரி 31ந்தேதியோடு முடிவடைவதாலும், அதற்கப்புறம் திராவிட நாட்டிலேயே முதன் முதலாக நடக்கப்போகும் மாநாடு இதுவேயாதலாலும், அதிலும் கொடியேற்றி வைக்கும் பொறுப்பை வரவேற்புக் கழகத்தார் எனக்கு ஒப்படைத்திருப்பதாலும், நான் விசாரித்து அறிந்துகொள்ள வேண்டி ஏற்பட்டது.

அம்முறையில் பார்க்கும்போழுது இன்று நாம் உயர்த்தியிருக்கும் கொடி, இன்று நமது மாநாட்டுக்குத் தலைமை வகிக்கப்போகும் எனது நண்பர், தோழர் பி. சண்முகவேலாயும் அவர்களால் சித்தரிக்கப்பட்டதும் பல தோழர்களால் ஆமோதிக்கப்பட்டதுமாகும். அதுமட்டுமல்ல; மற்ற தோழர்கள் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்களும் இதற்கு அநேகமாக ஒத்ததாகவே இருக்கின்றன. அதாவது, சற்றேறக்குறைய எல்லாருடைய சித்தரிப்பிலும் கறுப்பு நிறமும், சிவப்பு நிறமும் இருக்கின்றன. அமைப்பு முறை வேண்டுமானால், வேறு வேறாயும், அதுவும் சிறிதளவே இருக்கின்றனவேயல்லாமல், நிறம் சம்பந்தப்பட்டவரையில் ஏகோபித்த கருத்துக்களே அனைவர் உள்ளத்திலும் இருக்கின்றனவென்று சொல்லாம்.

ஏனென்றால், எல்லா வகையிலும் நாம் இழிவு படுத்தப்பட்டிருக்கிறோம் என்ற நமது நிலையைக் காட்டுவதற்குக் கறுப்பு நிறம் நமது கொடியில் அவசியம் என்று கருதுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அடுத்தாற்போல் நமது நிலை எவ்வளவு தாழ்த்தப்பட்டு—ஒடுக்கப்பட்டு—அடிமைப்பட்டு இருப்பினும், நமது உள்ளத்திலே பொங்கிக் குமுறிக் கொண்டு இருப்பது புரட்சித் தீ என்பதை எடுத்துக்காட்டவே சிவப்புநிறம் வேண்டும் என்று விரும்புகிறார்கள் என நான் அபிப்பிராயப்படுகிறேன். இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கும் கொடி பூராவும் கறுப்புநிறமாகவும், மத்தியில் வட்ட வடிவமாகப் பொறிகளுடன் சிவப்பு நிறமும் விளங்குகின்றன.

நம்மில் சில தோழர்கள் கொடியில் கறுப்பு நிறம் இருப்பது நன்றாயில்லை என்கிறார்கள். அவர்களுக்குக் கூறுகிறேன்—கறுப்பு எதிர்ப்புக்கு அறிகுறி, நாம் ஆரியத்துக்கு எதிர்ப்பு—வடநாட்டாருக்கு எதிர்ப்பு—சனாதனிகளுக்கு எதிர்ப்பு—சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் எதிர்ப்பு—வெள்ளையர் ஆட்சிக்கு எதிர்ப்பு—பட்டம் பதவி மோகினிகளுக்கு எதிர்ப்பு என்பனபோன்ற பல எதிர்ப்பு வேலைகளை மேற்போட்டுக் கொண்டுள்ள நமது கொடி கறுப்புக் கொடியாக அல்லாமல் வேறு என்னவாக இருக்கமுடியும் என்பதைத் தயவுசெய்து யோசித்துப் பாருங்கள். அத்துடன் வெறும் கறுப்புக்கொடி எதிர்ப்பைமட்டும் தெரிவிப்பதாக இருக்கும். ஆனால் கறுப்புக்கொடிக்கு மத்தியில் பொறிகள் பறக்கும் சிவப்பு நிறத்தைக் கண்டவுடன் நமது எதிரிகளும் அஞ்சுவார்கள்.

கறுப்புத் துணியை மாலையாகக் கொண்டுள்ள நம்மை எதிர்ப்பவர்கள் பூமாலைதானே போடவேண்டும்! நாம் இந்தக்கொடி கொண்டு செல்வோமானால் நமது எதிரிகள் ஓடி யொளிய

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

சைன்யவசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
உதவி தேவை
ஏனென்றால்
மே. த. கவர்னரின் யுத்த நிதி
சண்டை காலத்தில் போர்வீரர்களுக்கு எப்படி உதவியதோ, அதேபோல் கடல் கடந்த நாடுகளில் சேவை செய்யும் இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளின் நலன்களுக்கு இந்நிதி உதவுமேயானால் அதன் உதவி மிகத்தேவை. ஆகவே
தயவுசெய்து தாராளமாகவும், மிக அவசரமாகவும் பணம் கொடுத்துதவவும்
★
எனவே
தயவு செய்து உங்களது பணத்தை ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

# குடி அரசு

1946-ஆு பிப்ரவரிமீ 23-உ


## தேசியத் தமிழர்கள் இனி செய்யப்போவதென்ன ?

தமிழ்நாடு காங்கரஸ் தேசியத் தமிழர்கள் காந்தியாரை தங்களுடைய மதிப்பு வாய்ந்த தலைவராக, ஒப்புயர்வற்ற மகாத்மாவாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இன்றுவரை—இனியும் காந்தியார் பெயரைச் சொல்லித்தான், காந்தியாரின் பெருமையைச் சொல்லித்தான், காந்தியார் எதைச்சொன்னாலும் "ஆமாம் சாமி" போட்டுத்தான், "காந்திக்கு ஓட்டுப்போடுங்கள்" என்று சுவற்றில், கதவில் எழுதித்தான், கலியுக அவதாரம் என்று காந்தியார் படம் போட்டுத்தான், "காந்திக்கு வேவல் ரிக்ஷாவண்டி அனுப்பினார்" "காந்திக்கு ஹோப் கார் அனுப்பினார்" "காந்தியார் நாவசைந்தால் நாடசையும்" என்றெல்லாம்கூப்பாடுபோட்டுக் கேட்டுத்தான் காங்கரஸ் தேசியத் தமிழர்களான தோழர்கள் அண்ணாமலை, ஆதிகேசவலு, சுப்பையா, சுப்பிரமணியம் போன்றவர்கள் முதல், எல்லா தேசியத் தமிழ்த் தோழர்களும் சட்டசபை மெம்பர்களாகவும், மந்திரிகள், காரியதரிசிகள், சர்வாதிகாரிகள் ஆகவும் சர்தார்கள், தேசியக்கவிகள் ஆகவும் முடிந்ததே தவிர மற்றப்படி தமிழ்நாடு காங்கரஸ்காரர்களுக்கு வேறு எந்த விதத்தில் தனிப்பட்ட முறையில் தங்கள் சொந்தத் தன்மையில் இந்த யோகத்திற்கு வாய்ப்ப இருந்தது என்றும் கேட்கிறோம்.

அப்படியெல்லாம் காந்தியார் பேரால் நலனும், நல்லபயனும், அனேகமாய் ஒவ்வொருவரும் நல் வாழ்க்கை நிலையும் அடைந்துவிட்டு அவ்வளவோடல்லாமல் இன்னும் அடையவும் இன்றைக் கும்காத்து இருந்து கொண்டும் இருக்கிற தேசபக்த தமிழ் மக்கள், அதே காந்தியார் கூறிய ஒரேஒரு காரியத்திற்குஆக மாத்திரம் அதுவும் ஒரு சிறு சொல்லுக்குஆக தங்களுக்குப் பெரிய ஆத்திரம் அதிருப்தி, அவமானம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னால் இதைப் பாசாங்கு என்றோ அல்லது தாங்கள் அடைந்த ஏமாற்றத்தினால் தங்கள் சுயநலத்துக்குஆகச் சொல்லுகிறார்கள் என்றோ சொல்லாமல் இதில் உண்மையும் அறிவுடைமையும் இருக்கிறது என்று எப்படிச் சொல்லமுடியும்?

"காந்தியார் பெரியவர், அவர் மகாத்மா ஒப்பற்ற ஒரே தலைவர் உலகம் போற்றும் பெரியார்" என்றெல்லாம் சொல்லிப் புராணப் பிரசங்கம் செய்கிற மக்கள் "காந்தியார் (தங்களைப்பற்றிச்) சொன்ன ஒன்றைமாத்திரம் ஒப்புக்கொள்ளமுடியாது. அதற்குஆக வருந்துகிறோம்" என்றால் எதற்குஆக ஏன் வருந்துவது? உண்மை மையில் அறிவுடைமையோடு மானத்தோடு, நாணயத்தோடு இவர்கள் வருந்துவதானால் இவர்கள் காந்தியாரைப் "பெரியவர், மகாத்மா, ஒப்பற்ற ஏகதலைவர்" என்றெல்லாம் சொல்லி மக்களை ஏய்த்ததற்குஆகவும் அதன் பேரால் வாழநேரிட்டதற்கு ஆகவும் வருந்தி, அதன் பேரால் இதுவரை தமிழர்களுக்கு செய்துவந்த துரோகத்திற்கு ஆக வெட்கப்பட்டு, இந்த சாக்கைக்கொண்டாவது தங்களுடைய தப்பிதத்தையும் மானக்கேட்டையும் திருத்திக் கொள்ளவும் தாங்கள் தமிழர்களுக்கு இழைத்த துரோகத்துக்குப் பரிகாரம் செய்யவும் வகைசெய்து கொள்வார்களானால் அது அறிவுடைமையாகும் என்பதோடு உண்மையாய் தாங்கள் வருத்தப்படுவதற்கும் அறிகுறியாகும். அப்படிக்கின்றி "காந்தியார் இப்படி எழுதிவிட்டாரே" என்று சொல்லிக்கொண்டு அவரது ஜோலியிடமே காவடி தூக்கிக்கொண்டு ஆக்கப்படுவதில் வேஷம், சுயநலம் என்பதல்லாமல் பொருள் என்ன இருக்கமுடியும்?

இந்த இப்படிப்பட்ட ஆத்திரம் கூட இவர்கள் இஷ்டப்பட்ட ஆட்களைப் பார்லிமெண்டரி போர்ட்கள் ஒப்புக்கொள்ளுபனாலும் ஆச்சாரியார் ஆட்கள் இரண்டொருவரைத் தள்ளி விட்டாலும் அடியோடு அடுத்த வினாடியே மறந்துபோய்விடுமே ஒழிய இது நிலைத்திருக்குமா? காந்தியார் இவர்களுக்கு "ஓட்டுக்கொடுங்கள்" என்று சொன்னால் அப்போது மகாத்மா ஆகிறார். இவர்கள் இஷ்டப்பட்ட ஆட்களைப் பார்லிமெண்டரி போர்டுகள் ஒப்புக்கொண்டால் "எப்படி இருந்தாலும் மகாத்மா மகாத்மாதான்" என்று ஆகிவிடுகிறார். போர்டு ஒப்புக்கொள்ளாவிட்டால் அல்லது "ஆச்சாரியாரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று காந்தியார் சொன்னால் அப்பொழுதுதான் "மகாத்மா தவறுசெய்தவராகிறார்" என்றால் இதைப் பைத்தியக்காரத்தனம் என்றல்லாமல், வழிகட்டிய சுயநலம் என்றல்லாமல் வேறு என்ன என்று சொல்லமுடியும்?

ஆச்சாரியாரைத் தமிழ்நாடுகாங்கரஸ் ஸ்தாபனம் 4-அணா அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அகில இந்திய காங்கரஸ் ஸ்தாபன(ம் கூட அல்ல)த் தலைவர் "நான்ஏற்றுக்கொண்டுவிட்டேன்" என்றவுடன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவணங்கி ஒப்புக்கொண்டுவிட்டது. அடுத்தபடியாக ஆச்சாரியாரைத் தமிழ்நாடு (மாகாண) காங்கரஸ் கமிட்டியில் அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றும் அவர் சரியானபடி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி முடிவு கூறிவிட்டது. அதன் மேலும் அகில இந்திய காங்கரஸ் கமிட்டித் தலைவர் ஒரு தனிப்பட்ட நபரைத் தன் சொந்த முறையில் விசாரணைக்கு இங்கு அனுப்பினார், அவர் வந்து "ஆச்சாரியார் சட்டப்படி மெம்பராவார்" "அவரை மெம்பர் அல்ல என்று சொல்ல இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் சட்டப்படி இல்லை" என்று சொல்லி ஆச்சாரியாரை மெம்பராக்கிவிட்டுத் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டிக்கு சட்டம் தெரியவில்லை என்ற மூட்டாள் பட்டத்தையும் கட்டிவிட்டுப் போய்விட்டார். இவைகள் எல்லாம்தமிழ்நாடு காங்கரஸ்கமிட்டி, தலைவர்கள், பிரமுகர்கள், தியாகிகள், வீரர்கள் யாவராலும் பேச்சு மூச்சுக் காட்

டாமல் ஒப்புக்கொள்ளும்படி ஆகி விட்டன.

"நான் காங்கரசில் 4-அணா மெம்பர்கூட அல்ல, எனக்கும் காங்கரசுக்கும் சம்மந்தம் இல்லை, காங்கரஸ் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல, காங்கரசுக்கு யோசனை மாத்திரம் சொல்லுப வன், அதுவும் அவர்கள் அதைக் கேட்டால் கேட்கலாம் இல்லாவிட் டால் தள்ளிவிடலாம்" என்று சதா சொல்லிக்கொண்டு இருக்கும் ஒரு வரை (காந்தியாரை) தங்கள் தலைவர் என்று சொல்லி அவர் சொல்லும் எதை யும் தட்டாமல் ஏற்றுக்கொண்டு இருக்கும் காங்கரஸ் மெம்பர் கள், காங்கரஸ் கமிட்டி மெம்பர் கள், காங்கரஸ் தொண்டர்கள் காங்கரசுக்குஆக ஊர்ஊராய்சுற்றி பிரச்சாரம்செய்பவர்கள் ஆகியவர் கள் மற்றொரு குட்டி மகாத்மா வான, அதுவும் மக்களால் சர்க்கா ரால் எதிரிகளாலும் கவனிக்கப் படும், மதிக்கப்படும்படியான ஒரு வரும் அப்படிப்பட்ட மகாத்மா என்பவரால் முடிசூட்டப்பட்ட ஒருவருமான ஆச்சாரியாரைத் தலைவராக ஒப்புக்கொள்ள வேண் டும் என்று மகாத்மா சொல் லுவதில் சட்ட முரண்பாடோ நியாய முரண்பாடோ, அனுபவ முரண்பாடோ எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

ஆகஸ்டு தீர்மானத்தைக் காலை வாரிவிட்டு, காங்கரசுக்கு எதிர்ப்பிரசாரம்செய்து,காங்கரசிலி ருந்து வெளியாக்கப்பட்டோ" ராஜி நாமா செய்ய்ப்பட்டோ வெளி யேறி "காந்தியாரையே காலை வாரிவிடத் துணிந்து" காந்தியா ரோடு போராடிய பிறகுதான் காந்தியார், ஆச்சாரியார் வசப் பட்டு காந்தியாரால் ஆச்சாரியார் சேர்த்துக்கொள்ளப்பட்டி ருக்கிறார். அதோடு எந்தக் கொள் கைக்குஆக ஆச்சாரியார் "துரோகி" ஆனாரோ அந்தக் கொள்கையை அநுசரித்துத்தான் காந்தியார் ஆச்சாரியார் பேச்சைக் கேட்டு ஜின்னா சாயபு வீட்டிற் குச்சென்றுவந்தார். இந்தக் காரி யங்களை எல்லாம் அப்போதும் இப்போதும் தமிழ்நாடு காங்கரஸ் காரர்கள் வெறுக்கவில்லை. தேசி யத் தமிழர்களும் மூச்சுக்காட்ட வில்லை. அதற்காக மன வருத்தப்படவுமில்லை. காந் தியாரும் இவ்வளவு பெரிய பிரச்சினையைத் தமிழ்நாடு காங்க ரஸ்காரர்களைக் கேட்காமல் தானாகவே ஒப்புக்கொண்டு மேல் நடவடிக்கை நடத்தினதற்கு அவர் மீது எவரும் தவறு சொல்லவும் இல்லை.

இவ்வளவு மாத்திரமா! இன்னும் சொல்லுவோம், சென்ற மந்திரி சபை அமைப்பில் டாக்டர் ராஜனை அதாவது காங்கரஸ் தேர் தலில் காங்கரஸ் அபேட்சகருக்கு (தேவருக்கு) விரோதமாய் வெளிப் படையாய் வேலைசெய்து, அதுவும் வகுப்பு துவேஷம் காரணமாய் வேலைசெய்து, காங்கரசுக்குத் துரோகம்செய்தடாக்டர் ராஜனை, அதுவும்காங்கரசிலிருந்துதண்டித்து விலக்கி வைக்கப்பட்ட டாக் டர் ராஜனை, அவர் மெம்பர் கூட இல்லாமலிருக்கும் போதும் காங்கரசுக்கு சம்பந்தமில்லாமல் விலகி நின்றிருக்கும்போதும், ஆள் அனுப்பி வலியக்கூப்பிட்டுவந்து இன்றென்று மந்திரியாக்கியதை ஒப்புக் கொண்டு தலைவணங்கி கட்டியம் கூறிய இந்தக் கூட்டத்தார், ஆச் சாரியாரைக் காந்தியார் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னால் மாத் திரம் ஏன் வருத்தப்பட வேண்டு மென்று கேட்கின்றோம்.

அது மாத்திரமா? இன்னும் சொல்வோம்! கதர், காங்கரஸ், காந்தியார் ஆகியவைபற்றிசின்னா பின்னமாகப்பேசி எதிர்த்துப் பிரச் சாரம் செய்துகொண்டு இருந்த தோழர் எஸ். ராமநாதனை ஆச்சாரியார் சேர்த்துக் கொண்ட போதும், அவரை மந்திரியாகப் பண்ணியபோதும், அதைப் பிரசாதமாக ஒப்புக் கொண்ட இந்தக் கூட்டத்தார் ஆச்சாரியாரைக் காந்தியார் சேர்த் துக் கொண்டதற்கு மாத்திரம் இவ் வளவு ஆத்திரப்படுவானேன்? டாக் டர் ராஜனைப் போலவோ, தோ ழர் ராமநாதனைப் போலவோ "துரோகமோ, துவேஷப் பிரச்சா ரமோ" ஆச்சாரியார் செய்துவிட வில்லை என்பதோடு "காங்கரஸ் நலத்திற்கு ஆக் அதன் முக்கிய தலைவர்களில் ஒருவன் என்கின்ற முறையில், நான் திருத்தம் சொல் லுகிறேன். சில மாற்றம் சொல்லு கிறேன்" என்று சொன்னாரே தவிர மேற்கண்டவர்களைப்போல் காங்கரஸ் ஸ்தாபனத்தையே ஒழிக்கவோ காங்கரசுக்கு இழிவு வரவோ கருதி அவர் எதுவும் செய் துவிடவில்லை, என்பது உலகமறி யும். எது எப்படி இருந்தாலும் காந்தியார் சொன்ன பிறகு மறு பேச்சுப் பேசுவது என்பது எப்படி இதுவரை நடந்துவந்த "காந்தி,காங் கரஸ் நடைமுறை"க்கு ஏற்றதாகு மென்று கேட்கிறோம்.

ஆகவே இந்த தேசியத் தமிழ் வீரர்கள் ஒன்று காந்திக்கு அடங்கி நடக்கவேண்டும், அல்லது காந்தி யாரை எதிர்த்து நடக்கவேண்டும். காந்தியாரைஎதிர்ப்பது காங்கரசை எதிர்த்ததாக ஆகிவிடாது. ஆனால் காந்தியார் இல்லாமல் காங்கர சோ, தாங்களோ வாழமுடி

## செல்வம் நினைவு வாரம்

மார்ச் 1ந் தேதி முதல் 9ந்தேதி வரையில் கொண்டாடுக. திராவி டர் நாட்களில் ஒன்றான, சர் பன் னீர் செல்வம் அவர்களின் நினைவு வாரத்தில் திராவிடர் கழக உறுப்பி னர் சேர்க்கும் வேலையில் கழகத் தோழர்களும், கறுப்புச் சட்டைப் படையினரும் சலியாது ஈடுபடு மாறு வேண்டுகிறோம். செல்வம் நினைவு நாளை மேற்குறிப்பிட்ட காலத்தில், முடிந்தவரையில் உள் ளூர்த் தோழர்களையே கொண் டாவது கொண்டாடுமாறு கோரு கிறோம்.

## திராவிடர்கழக நிதிக்கமிட்டிக் கூட்ட அறிவிப்பு

★

4-3-46 திங்கள் காலை 10 மணிக்கு திருச்சியில்,தோழர் டி.பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் திராவிடர் கழக நிதிக்கமிட்டிக் கூட்டம் நடைபெறும்

நிதிக்கமிட்டி உறுப்பினர்கள் யாவரும் வருமாறு வேண்டு கிறேன்.

என். அர்ச்சுனன்,
நிதிக்கமிட்டித் தலைவர்.

யுமா என்பதை எதிர்ப்பவர்கள் முதலில் சிந்தித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். அல்லது எது வந்தாலும் சரியென்று துணிந்து தொண்டாற்றக் குழு சேர்க்க வேண்டும். ஒன்றுமில்லாமல் வெத்துவேட்டில் யாரையும் சுட முடியாது. வெங்காயவெடியால் யாரையும் அசைத்துவிடமுடியாது.

உண்மையில் இன்றைய தமிழ் நாடுகாங்கரஸ்நிலை தமிழர்களுக்கு மானக்கேடானநிலை என்பதோடு இந்த நிலை இந்த நாட்டில் அவமானகரமாய் இருப்பது ஒரு புறமிருக்க இனி இந்த சம்பவத்தால் வெளி மாகாணங்களில் கூட முன்னிலும் அதிகமாகத் தமிழர்களை இழிவாக மதிக்கும் தன்மை ஏற்பட்டு விட்டது. காங்கரசிலுள்ள தமிழர்களை நாட்டுப் பற்றுக்காகவோ இனப்பற்றுக்காகவோ சுயமரியாதைக்காகவோ அவர்கள் காங்கரசில் சேரவில்லை என்றும் சுயநலத்திற்கு ஆகவே விபீஷணர்கள் போலும், அனுமார்கள் போலும் காங்கரசில் சேர்ந்தார்கள் என்றும், அந்தப்படிக் கருதித்தான் பார்ப்பனர்களும் வட நாட்டார்களும் அவர்களை நடத்துகிறார்கள் என்றும் ஆதாரங்களோடு அவ்வப்போது எடுத்துக் காட்டி வரப்பட்டது. அதற்கு ஆகவே கல்லடி, சொல்லடி, காரியக்கேடடி முதலியவைகளை ஒரு கூட்டத்தார் அடைந்தும் வந்தார்கள்.

என்ன காரணத்தாலோ இதுவரை காங்கரசிலுள்ள தமிழர்கள் பெரும்பாலோர் வெளிப்படையாய் இதை அறிந்துகொள்ளும்படியான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆனால் இப்போது நன்றாய் அவர்களே ஒப்புக்கொண்டு குறையிரந்து தவிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இனி என்ன செய்... [illegible] இதை "மன்னித்துவிட்டு" "இனியும் பொறுத்துப் பார்ப்போம்", என்று மானமிழந்து வாழப் போகிறார்களா? அல்லது இனிமேலாவது இம்மாதிரியான மானக்கேடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள இந்த மாதிரி வடநாட்டு ஆதிக்கத்தை ஒரு கை பார்க்கப் போகிறார்களா? என்பதை பொறுத்துப் பார்ப்போம்.

---

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

---

## திருச்சி ஜில்லா 17வது திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) மாநாடு

ஷை மாநாடு 3-3-'46 ஞாயிறு காலை 9மணிக்கு திருச்சி சோழங்க நல்லூர் கிராமத்தில் 'திரு அங்கப்ப அம்பலகாரர்' பந்தலில் நடைபெறும்.

தலைவர்: தோழர் என். அர்சுனன், (பழயகோட்டை பட்டக்காரர் இளைய குமாரர்) அவர்கள்.

திறப்பாளர்: தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள்.

கொடியேற்றுபவர்: கே. ராஜசேகரன் பி. ஏ., பி. எல்., அவர்கள், சிவகங்கை.

மற்றும் பெரியார் ஈ. வெ. ராமசாமி, கே. வி. அழகிரிசாமி, ஈ. வி. கே. சம்பத் முதலியவர்கள் கலந்துகொள்வார்கள். அன்பர்கள் அனைவரும் வருக.

ஏ. சின்னதுரை அம்பலகாரர்,
வரவேற்பு கழகத் தலைவர்.
டி. பி. வேதாசல[illegible],
எம். [illegible]
[illegible]டராஜன்,
செயலாளர்கள்.

---

## நன்றி

10-2-46 ஞாயிறு மாலை 5-மணிக்கு மயிலாப்பூரில் நடைபெற்ற கறுப்புச்சட்டைப்படைத் தொண்டர்களுக்கும், காலேஜ் மாணவர்களுக்கும், இயக்கத் தோழர்களுக்கும் மயிலை திராவிடர் கழகத்தார் தமது நன்றியை தெரிவிப்பதாக செயலாளர் தோழர் ஏ. சாமிநாதன் எழுதுகிறார்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.

14-2-46 சென்னையிலிருந்து திருமபிய பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஈரோட்டில் ஓய்வெடுத்துக்கொண்டு 21-2-46 சேலம் கல்லூரி உணவு விடுதி ஆண்டுவிழாவிற்குச் சென்றுவந்து, 22ந்தேதி இரவு நீடாமங்கலம் மாநாட்டிற்குச் சென்றார். 23, 24 தேதிகளில் மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டு 25ந் தேதி திருவையாறு கூட்டத்திற்குச் சென்று ஈரோடு திரும்புவார்.

பின் 2-3-46 உறையூர் ஆண்டு விழாவிற்கும், 3-ந்தேதி திருச்சி மாவட்ட சோழங்க நல்லூர் மாநாட்டிற்கும், 4ந்தேதி திருச்சியில் திராவிடர்கழக நிதிக்கமிட்டிக் கூட்டத்திலும், தென்னிந்திய இரயில்வே அலுவலாளர்களால் அளிக்கப்படும் தேநீர் விருந்திலும் மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

---

## உடனே தேவை

அநேக மாவட்டங்களில் இன்னும் முறையாக மாவட்ட தலைமை திராவிடர் கழகம் அமைக்கப்படவில்லை. தாலூகா கழகங்களும் அமைக்கப்படவில்லை.

அந்தந்த மாவட்ட முக்கியஸ்தர்கள் உடனே மாவட்ட, தாலூகா கழகங்களை அமைத்து நிர்வாகஸ்தர்கள் பெயர்களை தெரிவிக்குமாறு கோருகிறோம்.

விரைவில் கழகங்கள், நிர்வாகஸ்தர்கள் பெயர்களை புத்தகமாக வெளியிட வேண்டியிருக்கிறது.

ஆ. திராவிடமணி.

## அறிக்கை

"குடி அரசு" "பகுத்தறிவு" வெளியீடுகள் எங்களிடம் போதிய அளவு ஸ்டாக் இல்லாததால், யாருக்கும் கமிஷனுக்கு புஸ்தகம் அனுப்புவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

---

திருத்துறைப் பூண்டியில் நடைபெற்ற கறுப்புச் சட்டைப்படை மாநாட்டின்போது தமிழ்க்கொடி கடலை மிட்டாய்க் கம்பெனி தோழர் சுப்ரமணியம் கறுப்புச் சட்டைப்படை வளர்ச்சிக்கு 101 காணாக்களை அளித்தார்.

# நடக்க இருப்பவை

★24-2-46 பகல் 11மணிக்கு மதுரை நகர திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் லெட்சுமிபுரம் குறுக்குத்தெரு சுக்குனி அவர்கள் வீட்டு மாடியில் நடைபெறும். வருக அனைவரும்!

★உறையூர் திராவிட இளைஞர் கழக முதல் ஆண்டுவிழா தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் 2-3-46 மாலை 6மணிக்கு பஞ்சவர்ணசாமி கோயில் தெருவில் நடைபெறும், பெரியார் ஈ.வெ.ரா. சனார்த்தனம், டி. கே. சீனிவாசன் ஆகியோர் பங்கு கொள்வார்கள்.

★வேலூர் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் 3-3-46 மாலை 5-மணிக்கு கோட்டை வெளியில் நடைபெறும். தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

★திருவையாறு சுற்றுவட்ட திராவிடர் கழக பொதுக்கூட்டம் 25-2-46 மாலை 4-மணிக்கு புஷ்ய மண்டபத்திற்கு எதிரில் (காவேரியாற்றில்) நடைபெறும். தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் விரிவுரையாற்றுவார்கள்.

★இராசீபுரம் திராவிட மாணவர் கழக திறப்புவிழா தோழர் எ. சித்தையன் தலைமையில் 24-2-46 காலை 8-30 மணிக்கு நடைபெறும். பல தோழர்கள் கலந்து கொள்வார்கள்.

★நீடாமங்கலத்தில் முஸ்லிம் வாலிபர் அரசியல் மாநாடு மார்ச் முதல் வாரத்தில் நடைபெறும்.

★வடசென்னை தமிழ் இளைஞர் மன்ற ஆதரவில் 24-2-46 மாலை 5-30 மணிக்கு வண்ணை தனலட்சுமி பாடசாலைக்கு அருகில் உள்ள மாடசாமி நாடார் தெருவில் தோழர் கே.எஸ்.ஆர். சின்னதுரை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் அன்பழகன் என். வி. நடராசன், பாண்டியன், பழனிச்சாமி, கோவிந்தசாமி, எம். கே. டி. சுப்ரமணியன் ஆகியோர்பேசுவார்கள்.

★சென்னை ஜில்லா திராவிடர் பெட்[illegible]ன் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 26-2-46 மாலை 6மணிக்கு பார்க் டவுன் பொம்முசெட்டித் தெரு 11வது எண் மாடியில் நடைபெறும். நிர்வாக உறுப்பினர் வருக!

## திராவிடர் கழக அங்கத்தினர் சேர்த்தல்

### அறிவிப்பு

தோழர்களே,

அந்தந்த மாவட்டத்தில் இது வரை சேர்த்துள்ள அங்கத்தினர்கள் எண்ணிக்கைக் குறிப்பை அடுத்த கிழமையிலிருந்து வெளியிடவேண்டியிருப்பதால் இது வரை இரசீது புத்தகங்கள்பெற்ற தோழர்கள் உடனே அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

இன்னும் அநேக திராவிடர் கழகங்களிலிருந்து இரசீது புத்தகங்கள் அனுப்புமாறு எழுதவேயில்லை. எல்லாத் தோழர்களும் உடனே தேவையான இரசீது புத்தகங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்வதோடு அன்புகூர்ந்து அயராது முயன்று அங்கத்தினர்களைச் சேர்த்தனுப்பக் கோருகிறேன்.

அங்கத்தினர்களைச் சேர்த்தலில் கீழ்கண்ட முறைகளைக் கவனிக்க வேண்டுகிறேன்.

1. பெண்களையும் அதிகமாகச் சேர்த்தல் வேண்டும்.

2. இயக்கத்தோழர்கள் அனைவரும் தங்கள் இல்லத்திலுள்ள வயது வந்த ஆண்கள், பெண்கள் அனைவரையும் கூடுமானவரை சேர்க்கவேண்டும்.

3. சென்ற ஆண்டு அங்கத்தினர்களாக இருந்தவர்களிடமும் நான்கணா வீதம் இவ்வாண்டிற்கும் தற்பொழுதுள்ள இரசீதைக் கொடுத்தே வசூலிக்க வேண்டும்.

4. தலைமை நிலையத்திற்கு அனுப்பவேண்டிய இரசீது பகுதியோடு சென்ற ஆண்டு அங்கத்தினர்களாக இருந்து இவ்வாண்டு கட்டணம் செலுத்தியவர்கள் பெயர்களைத் தனித்தாளிலும் இவ்வாண்டில் புதிதாகச் சேர்ந்தவர்கள் பெயர்களைத் தனித்தாளிலுமாக எழுதியனுப்பவேண்டும்.

5. ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்தும் வசூலிக்கப்படும் நான்கணாவில் இரண்டணாவை தலைமை நிலையத்திற்கு (ஈரோடு) அனுப்பவேண்டும்.

6. ஜில்லா தலைமைக் கழகம் நிறுவப்பட்டு முறையாக இருந்தால் ஜில்லா கழகத்திற்கு அனுப்ப வேண்டிய இரசீது பகுதியை அவ்விடத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

7. கழகத்தில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் (கழகம் இல்லாத இடங்களிலுள்ள) தனிப்பட்ட தோழர்கள் 5½ அணா தபால் தலை அனுப்பி வைத்தால் அங்கத்தினராக சேர்த்துக்கொண்ட இரசீது அனுப்பிவைக்கப்படும்.

ஆ. திராவிடமணி
திராவிடர் கழகம்,
தலைமை நிலையம், ஈரோடு.

## அறிக்கை

20-2-46 மாலை 7-மணிக்கு தஞ்சை ஜில்லா திராவிடர் கழக அமைப்பிற்கு, கூட்டம் கும்பகோணம் நாகேஸ்வரன் வடக்கு வீதியிலுள்ள திராவிடர் கழகத்தில் கூட்டப்பட்டது. ஷை கூட்டத்திற்கு தஞ்சை மாவட்ட பல தாலுக்காக்களில் இருந்து பிரதிநிதிகள் வராத காரணத்தால் இந்த அமைப்புக் கூட்டம் 10-3-46 ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு நாகேஸ்வரன் வடக்குவீதி டி. எம். நாயர் ஞாபகார்த்த கட்டிடத்தில் நடைபெறும். தாலுக்கா கழகங்கள் தங்களுடைய கழகத்தின் தலைவர் காரியதரிசி முதலிய விபரத்தை உடனே கும்பகோணம் கழகத்திற்கு கடிதமூலம் தெரிவிக்கக் கோருவதோடு இல்லாத தாலுக்காகளில் உடனே கழகத்தை நிறுவி அதன் விபரத்தையும் 3-3-46க்குள் தெரியப்படுத்தக் கோரப்படுகிறது.

கே. கே. நீலமேகம்,
செயலாளர், திராவிடர்கழகம்
கும்பகோணம்.

## தோழர் ஜி. லட்சுமணன்

இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்று உயிர்நீத்த வீரன் ல. நடராசன் தந்தையார் தோழர் ஜி. லட்சுமணன் மிக சேஷ்வாய்ப்பட்டு, எழுகிணறு போலிஸ் ஸ்டேஷனை அடுத்த பன்னைக்கார ஆண்டியப்பன் தெரு, 2/2 எண்ணுள்ள இல்லத்தில் இருந்துவருகிறார்.

## அறிவிப்பு

**திராவிடர் கழக கூட்டுச் செயலாளர்**

திராவிடர் கழக 16-12-45ந் தேதி நிர்வாகக் குழு தீர்மானப்படி திராவிடர் கழகத்திற்குக் கூட்டுச் செயலாளராய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் கடலூர் ஆ. திராவிடமணி பி. ஏ., அவர்கள் 19-2-46ல் ஈரோடு வந்து கழகக் காரியாலயப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

ஜில்லா, தாலுக்கா, கிராமக் கழகத்தார்களும் நிர்வாகக்குழு அங்கத்தினர்களும் அங்கத்தினர் பதிவு, மற்றும் இயக்க சம்பந்தமான எல்லாக் காரியங்களுக்கும் கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதப் போக்குவரத்து முதலியவை வைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி:

செயலாளர், திராவிடர் கழகம், ஈரோடு.

குறிப்பு.- கழக சம்பந்தமின்றி சொந்தக் கடிதங்கள் எழுதுவோர் ஆ. திராவிடமணி எனப் பெயர் குறிப்பிட்டு எழுதுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

---

## சென்னை ஜில்லா சுயமரியாதைச் சங்கம்

ஷை நிர்வாகக் கூட்டம் 13-2-46 மாலை 6-30 மணிக்கு சென்னை பார்க்டவுன் பொம்முசெட்டித் தெரு நெ. 11-வது இல்லத்தில் நடைபெற்றது. சென்னையில் எல்லா வட்டங்களிலிருந்தும் நிர்வாக உறுப்பினர்களாயுள்ள பிரதிநிதிகள் வந்திருந்தனர். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கூட்டத்திற்கு தலைமைவகித்து நடவடிக்கைகளை நடத்தினார். இயக்க முன்னேற்றத்திற்கான பல வழிகளை சென்னையில் தீவிரமாக செய்ய யோசித்து, திட்டங்கள் வகுக்கப்பட்டன. "நமது இயக்கத்திற்கு பேருதவியாயிருந்த தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., அவர்கள் இயற்கை எய்தியமையைக் குறித்து வருந்தி சங்கத்தின் ஆழ்ந்த அநுதாபத்தை அவரது உறவினர்களுக்கு தெரிவித்துக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

## திருவாரூர் திராவிடர் கழகம்

17-2-46 காலை 9-மணிக்கு திருவாரூர் எடத்தெருவில் உள்ள திராவிடர் கழகத்தை தோழர் சனார்த்தனம் தலைமையில் தோழர் ஈ. வி. கே. சம்பத் திறந்து வைத்தார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதுதானே!! மற்றபடி நம்மையெதிர்க்க கொடியேது? நம்மை எதிர்ப்பதாக நினைத்து கறுப்புக்கொடி பிடிப்பார்களேயானால் நம்மையும் நமது கொடியையும் கண்டதும் அவர்கள்தான் வெட்கித் தலைகுனியவேண்டும்; அறிவு வந்தவர்கள் பேசாது நமது கொடியின் கீழ் வந்துவிடுவதைத் தவிர வேறு வழி கிடையாது.

எனவேதான் நமது நிலையையும் நமது எதிர்ப்பு வேலையையும் குறிக்கக் கறுப்பு நிறமும், நமது லட்சியத்தையும் அதற்கான புரட்சி வேலைகளையும் எடுத்துக்காட்ட சிவப்பு நிறமும் நமது கொடியில் அமைக்கப்படவேண்டும் என ஆசைப்படுகிறோம். இந்தக்கொடி பெரியார் அவர்கள் கூறுவதுபோல் விஞ்ஞான அறிவுக்குப் பொருத்தமாயிருக்கிறது; நமது நிலையை விளக்குகிறது; நமது லட்சியத்தைக் குறிக்கிறது; காலத்திற்கேற்றாற்போல் மாற்றப்படுகிறது; சுலபமாகத் தயாரிக்கவும் முடிவது. ஆகவே நமது புரட்சிக் கருத்துக்களால்—புரட்சிப் பேச்சுக்களால்—புரட்சிச் செயல்களால் நாளுக்குநாள் நமது இழிவுகள் ஒழிக்கப்பட்டு—நமது நிலை உயர்த்தப்பட்டு—நமது வாழ்வில் வெற்றிகண்டு, "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற நமது லட்சியத்தை அடைந்து அந்நாளில் நமது புரட்சியின் வெற்றிக்கொடியாக நமது கொடி பூராவும் சிவப்பு நிறமாகவும், அதன் மத்தியில் நமது திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் உருவச் சின்னம் கொண்டதாகவும் விளங்கும்—விளங்கச்செய்யவேண்டும் — விளங்கியே ஆகவேண்டுமென்று விரும்புவதோடு, அந்த நன்னாளை விரைவில் காண திராவிட மக்கள் அனைவரும் இந்த ஒரு கொடியின்கீழ் நின்று பணியாற்ற விரைந்தோடி வர வேண்டிக்கொண்டு திராவிட நாட்டுச் சரித்திரத்திலேயே முக்கிய இடம் பெறக்கூடிய, அதாவது புதுக் கொடியின் கீழ் அனைவரும் ஒன்றுதிரண்டு நிற்கும் இந்த மாநாட்டில் புரட்சிக்கொடியை உயர்த்தும் பணியை நான் பெற்றமைக்கு உள்ளபடியே நான் பெருமைப்பட்டுக்கொண்டு இவ்வரிய பொன்னான சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த இம்மாநாட்டு வரவேற்புக் கழகத்தாருக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்:

## மாணவர் பகுதி

திருவாரூர் திராவிட மாணவர் கழக 3வது ஆண்டு நிறைவுவிழா 17-2-46 காலை 9-30 மணிக்குத் துவங்கிற்று. புகைவண்டி நிலையத்திலிருந்து மாணவமணிகளின் ஊர்வலம் நடைபெற்றது. தோழர் டி. கே. விசயராகவலு பி. ஏ., பி. எல், தலைமைவகித்தார். காலை நிகழ்ச்சியில் தோழர்கள் புலவர் குழந்தையா, ஆர். வேணுகோபால், பாவலர் பாலசுந்தரம், என். பி. காளியப்பன், மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பிற்பகல் நிகழ்ச்சியில் தோழர்கள் எஸ். தவமணிராசன், ஏ. பி. ஜனார்த்தனம், கி. தியாகராசன், ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் பேசினர். தோழர் தே. வெங்கடாசலம் கொண்டுவந்த தீர்மானங்கள் தோழர் சீராமுலு ஆமோதிக்க நிறைவேற்றப்பட்டன. மாலையில் விசயபுரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் சனார்த்தனம் தலைமையில் தோழர்கள் புலவர் குழந்தையா, ஈ.வி.கே. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தஞ்சை ஜில்லாவின் பல பாகங்களிலுமிருந்து கறுப்புச்சட்டைப் படையினர் பலர் வந்திருந்தனர்.

o o

மன்னார்குடியில் 10-2-46ல் புதுச்செட்டி தெருவிலுள்ள திராவிட மாணவர் கழகத்தை தோழர் ஈ. வி. கே. சம்பத் திறந்துவைத்தார். அன்று மாலை பெரியார், செல்வம் படங்களுடன் கறுப்புச்சட்டை மாணவர் ஊர்வலம் நடைபெற்று பொதுக்கூட்டத்தில் தோழர் இல. இராமச்சந்திரன் தலைமையில் தோழர்கள் சரவணன் பி. ஏ., கே. ஆர். ஜி. பால், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

விருதுநகர் திராவிட மாணவர் கழகக் கூட்டம் 3-1-46ல் தோழர் ஆசைத்தம்பி தலைமையில் நடைபெற்றபொழுது பல தோழர்கள் சொற்பொழிவாற்றியபின் புதுவருட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


# நங்கை

(மாத வெளியீடு)

ஓர் உயரிய தமிழ்ப் பத்திரிகை; 1-4-1946ல் இருந்து வெளிவருகிறது.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:- மானேஜர், 'நங்கை' ஆபீஸ்,
203, கபூர்கான் மைதானம், அரக்கோணம்.


ரோஜா முத்தையா

# திராவிடர் கழகங்கள்

23-1-46 மாலை மாயவரம் கூறைநாடு திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் இ. வரதராஜுலு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் காஞ்சி கல்யாண சுந்தரம் சொற்பொழி வாற்றினார்.

o o

30-1-46ல் வேளுக்குடி திராவிடர் கழகக் கூட்டம் தோழர் சோ. முருகேசம் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் சோ. முருகேசம் தலைவராகவும் வே. சி. பக்கிரிசாமி செயலாளராகவும், மற்றும் பல உறுப்பினர்களும் புது ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

31-1-46ல் நாசரேத் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் பி. எஸ். கே. ஜெயபால் தலைமையில் நடைபெற்றபொழுது இவ்வாண்டிற்கு அதிக அங்கத்தினர்கள் சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

o o

1-2-46 வேலூரில் தோழர் நாட்டாம்பள்ளி கந்தசாமி தலைமையில் கூடிய வ. ஆ. ஜி. திராவிடர் கழக கமிட்டி கூட்டத்தில் டை கமிட்டியின் தலைவராக தோழர் நாட்டாம்பள்ளி ஆர். வெங்கட்டராமனையும் மற்றும் 13 உறுப்பினர்களையும்கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. திருவண்ணாமலை டி. டி. தம்புசாமி இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டு பாகவதர் கிருஷ்ணன் விடுதலை வேண்டுகோள் தீர்மானம் நிறைவேறியது.

o o

3-2-46 புள்ளம்பாடியில் நடந்த திராவிடர் கழக பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வீரமுத்து, ராமலிங்கம், நல்லதம்பி ஆகியோர் பேசினர். ரெங்காசன் பாடினார்.

o o

5-2-46 திருவண்ணாமலை திராவிட வாலிபர் கழக நிர்வாகஸ்தர் தேர்தல் நடைபெற்று தோழர்கள் குமாரசாமி தலைவராகவும், தியாகராசன் செயலாளராகவும் பாலகிருஷ்ணன் உதவி செயலாளராகவும் மற்றும் ஒரு கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

10-2-46 மாலை தோழர் பி. சீதாபதி தலைமையில் திருவண்ணாமலை திராவிடர் சொற்பயிற்சிக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 'தமிழன் போர்' என்ற நாடகம் பயிற்சியளிக்கப்படுகிறது.

o o

6-2-46 ராஜபாளையம் திராவிடர் கழக கூட்டம் தலைவர் எ. எஸ். சேதுராமன் தலைமையில் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு என். எஸ். கே, எம். கே. டி, விடுதலைகோரி கவர்னருக்குத் தந்தி கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

o o

7-2-46 பண்ருட்டிக்கடுத்த புதுப்பேட்டையில் திராவிட இளைஞர் கழகத்தின் கூட்டம் தோழர் என். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்று தோழர்கள் வைத்திலிங்கம், வி. எஸ். நடேசன், சாமிக்கண்ணு, ரசாக் சாயபு, சாம்பசிவம் ஆகியோர் பேசினர். பாகவதர் கிருஷ்ணன் விடுதலை வேண்டுகோள் மனு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

o o

25-1-46ல் பொள்ளாச்சி திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டம் நடைபெற்று 1946ம் வருடத்திற்கு தோழர் பி. கே. கிருஷ்ணசாமி தலைவராகவும், பி. நடராசன் பொருளாளராகவும், பி. என். ராமானுசம் செயலாளராகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

o o

3-2-46 சென்னை வியாசர்பாடியில் திராவிடர் கழக கிளைச்சங்க ஆதரவில் தோழர் எஸ். கஜேந்திரன் தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன், என். ஜீவரத்தினம், கே. அன்பழகன், எஸ். எ. டி. வேலு, என். எஸ். தங்கரூபன் ஆகியோர் சொற்பொழி வாற்றினார்கள்.

o o

3-2-46 கள்ளிகுளம் திராவிடர் கழக கூட்டம் தோழர் டேவிஸ் தலைமையில் நடைபெற்று தோழர்கள் சேக் முகம்மது, சங்கரபாண்டியன், மாதவடியான், ஜெயசிங் ஆகியோர் பேசினார்கள்.

o o

2-2-46 சின்னசேலம் திராவிடர் கழக கூட்டம் தோழர் அப்துல்யமாத் தலைமையில் நடைபெற்று தோழர் புலவர் நா. மு. மாணிக்கம் 'கலையும் வாழ்வும்' என்பதுபற்றிப் பேசினார்.

o o

5-2-46 இரவு திருவண்ணாமலை திராவிடர் கழக தேர்தல் தோழர் எஸ். முருகையன் தலைமையில் நடைபெற்று தோழர்களான அ. ப. முருகேசன், டி. சீனிவாசன், அ. சு. சண்முகம், பூங்காவனம், தர்மலிங்கம் ஆகியோர் முறையே தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர் பொருட்காப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கமிட்டி நிறுவப்பட்டது.

o o

11-2-46 இரவு கோயமுத்தூர் டவுன் புளியகுளத்தில் தோழர் எஸ். வெங்கட்டராமன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்று தோழர் இரா. நெடுஞ்செழியன் முதலியோர் பேசினார்கள்.

o o

3-2-46ல் தூத்துக்குடி சிம்கானா தருவை மைதானத்தில் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக கூட்டத்தில் தோழர்கள் எஸ். என். ராசன், எஸ். எஸ். அர்ச்சுனன் ஆகியோர் பேசினர்.

o o

10-2-46 செல்வநாயகபுரத்தில் தோழர் எஸ். ராசகோபால் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக கூட்டத்தில் தோழர்கள் வீரசிகாமணி, எஸ். என். ராஜன், பாண்டியன், தங்கசாமி ஆகியோர் பேசினர்.

o o

1-2-46ல் வழுவூர் திராவிடர் கழக சார்பில் மாயவரம் திராவிடர் கழக காரியதரிசி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கூட்டத்தில் தோழர்கள் சவுரிராசன், ராஜாராமன், சாமிநாதன் ஆகியோர் பேசினார்கள்.

o o

5-2-46 நன்னிமங்கலம் திராவிடர் கழக சார்பில் தோழர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பம்பாயில் வெடிவூல்டு வகுப்புத் தோழர் சோக்காஜி கொலையைப்பற்றி கண்டித்துப் பேசப்பட்டது.

o o

திருச்சி பீமநகர் திராவிட இளைஞர் கழக தேர்தல் 10-2-46ல் நடைபெற்று தோழர்கள் இராசு, பெருமாள், மாணிக்கம், சேவராசு, மீனாட்சி சுந்தரம் ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கமிட்டி அமைக்கப்பட்டது.

o o

சிறுத்தொண்டநல்லூர் திராவிடர் கழக சார்பில் 10-2-46ல் தோழர் சிவசங்கு கொடியேற்றுவிழா வாற்றியதோடு இரவு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பலர் பேசினார்கள்.

o o

தா. பேட்டை திராவிட வாலிபர் கழக ஆதரவில் 17-2-46ல் ஊர்வலமும், தோழர் எல். மாணிக்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் து. மா. பெரியசாமி, இரா. நெடுஞ்செழியன், ஆகியோர் பேசினர்.

o o

இடைப்பாடியில் 10-2-46ல் திராவிடர் கழக நிர்வாக கூட்டம் நடைபெற்று தோழர் ஆர். தாண்டவன் தலைவராகவும், தோழர்கள் பண்டரிநாதன், வே. பெருமாள், வி. காசிலிங்கம் ஆகியோர் முறையே செயலாளர், உதவி செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

எட்டயபுரம் திராவிடர் கழக சார்பில் 15-2-46ல் டி. எஸ். நடராசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் சுப்

# திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழக (ஜஸ்டிஸ்)3வது மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. திராவிடர் கழக இயக்கப் பிரசாரத்திற்கு ஒரு தினசரி பத்திரிகையாக "விடுதலை" பத்திரிக்கை நடத்தப்பட வேண்டும் என்கின்ற திருச்சி நிர்வாகக் கமிட்டியின் தீர்மானத்தை இம் மாநாடு ஆதரிப்பதுடன் இந்த ஜில்லாவில் 1000 பத்திரிகைகள் செலவிடும்படி ஜில்லா மக்கள் முயற்சி செய்யவேண்டுமென்றும்,

2. திருநெல்வேலி ஜில்லாவில் இவ்வாண்டில் 10000 அங்கத்தினர்களும் 250 கறுப்புச்சட்டை தொண்டர்களும் 5000 ரூபாய் நிதியும் சேர்க்க வேண்டும் என்றும்,

3. திராவிட மக்களின் மனம் புண்படும்படியான நிலைமைக்கு 14-வருட கடின காவல் தண்டனை அடைந்து சிறையில் அவதிப்படும்தோழர்கள் நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகியவர்கள்மீது கருணை காட்டுமாறு மே. த. கவர்னர் அவர்களைக் கேட்டுக்கொண்டும்,

4. நமது ஜில்லாவில் கட்டாயக் கல்வி சட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டுவரும்படி கவர்ன்மெண்டாரை வேண்டியும்,

5. புரட்சிக்கவி பாரதிதாசன் கவிதையைப் பள்ளிக்கூட புத்தகங்களில் வெளியிட மாகாண கல்வி இலாக்கா அதிகாரிகளை கேட்டுக்கொண்டும்,

6. டாக்டர் அம்பேத்கார் தொழிலாளிகளின் நன்மையைக் கருதி தொழிலாளிகளுக்கு 10-நாள் லீவு கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் மத்திய சர்க்காரால் ஆதரிக்கப்பட்டு மாகாண சர்க்காருக்கு அத்தீர்மானம் வந்திருப்பதை மில் முதலாளிகள் எதிர்ப்பதை சர்க்கார் செவிசாய்க்காமல் தொழிலாளிகள் நலனைக் கருதி 10நாள் லீவுகொடுக்கும்படி சர்க்காரை கேட்டுக்கொள்ளுவதாகவும்,

7. சமுதாயக் குறைபாடுகளை அரசாங்கம் நடுநிலைமையில் நின்று ஆராய்ந்து அதற்கு ஆவனசெய்ய வேண்டுகிறோம். அப்படி அரசாங்கம் சிரத்தை காட்டாவிடில் பெரியதோர் கிளர்ச்சி பண்ணவேண்டுமென்று தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை கேட்டுக்கொண்டும்,

8. 16, 17-வது திராவிடர் கழக மாகாண மாநாடுகளின் தீர்மானங்களை இம்மாநாடு ஒப்புக்கொள்வதோடு அவைகளை அமுலுக்கு கொண்டுவரவும், பிரசாரம் செய்யவும் ஒவ்வொரு அங்கத்தினரும் முயற்சிசெய்ய வேண்டுமென்றும்,

9. உணப்பொருள்கள், ஆடைகள், யுத்தம் முடிந்தும் இன்னும் பொதுமக்களுக்கு சமத்துவமாகவோ சவுகரியமாகவோ குறிப்பிட்டபடி கிடைப்பதற்கு இல்லாமல் இருக்கிறபடியால், பெரும்பான்மையான பொதுமக்களுக்கும், கிராம ஏழை ஜனங்களுக்கும் அதை சரியான முறையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தாரை கேட்டுக்கொண்டும்,

10. நெல்லை ஜில்லாவில் பெரும்பான்மை நெசவாளர்க்கு போதிய நூல் வசதி கிடைக்காததால் நெசவாளர்கள் மிகவும் கஷ்டமடைகிறார்கள், இவர்களின் குறைகளை நீக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று ஜில்லா, மாகாண கமிஷனர்களை கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

---

ஐயா, கலிங்கன், ஆத்தியப்பன் ஆகியோர் பேசினர்.

o o

திருச்சனம்பூண்டியில் 7-2-46ல் திராவிடர் கழகத் தேர்தல் நடைபெற்று தோழர்கள் டி. வீரய்யா, ஆர். முனுசாமி, ஆர். அப்பாவு துரைமாணிக்கம், அண்ணாச்சாமி ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

ஈரோடு பெரியக்கிரகாரம் திராவிடர்கழகத் திறப்புவிழா தோழர் ராகவன் தலைமையில் நடைபெற்று தோழர்கள் நெடுஞ்செழியன், சனார்த்தனம், எம். சுப்பையன், ஷகாப் ஆகியோர் பேசினர். தலைவர், உபதலைவர், செயலாளர்கள், பொருளாளராக முறையே தோழர்கள், பெரியண்ணன், திருமலை, சீனுவாசன் நாச்சான் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பட்டிவீரன்பட்டி திராவிடர் கழகம்

5-2-46 தோழர் ஆழ்வார் தலைமையில் இவ்வூரில் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது: அவ்வமயம் தோழர் ஓ. வி. கே. நீர்காத்தலிங்கம் தலைவராகவும் தோழர் எம். ஆழ்வார் உபதலைவராகவும் தோழர் கே. நடராஜன் செயலாளராகவும் சி. ஜெயப்பிரகாசன் உபசெயலாளராகவும் திரு டி என். எஸ். மீனாக்ஷிசுந்தரம் பொருளாளராகவும் மற்றும் 12 பேர் நிர்வாக உறுப்பினர்களாயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் ஆ. கருப்பையா தாசுக்கொடியை ஏற்றிவைத்தார்

## சாத்தூர் செய்திகள்

சாத்தூர் திராவிட மாணவர் கழகத்தின் சார்பாக சர். செல்வம் ஞாபகார்த்த "கால் பந்தாட்ட கழகம்" ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

o o

சாத்தூர் தாலூகா ஆலம்பட்டி கிராமத்தில் சர் செல்வம் நினைவு நாள் சா. இராமசாமி தலைமையின்கீழ் 3-2-46ல் நடைபெற்றது. பி. இராசமணி, இளசை முத்துக்கருப்பன், மாணவ தோழர் காந்தி முதலானோர் பேசினர்.

o o

சாத்தூர் திராவிடர் கழக உறுப்பினர் தோழர் அருணாசலம் அவர்களுக்கும் தமயந்தியம்மாளுக்கும் ஏழாயிரம் பண்ணையில் 6-2-46ல் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. பி. இராசமணி, இளசை முத்துக்கருப்பன் முதலானோர் பேசினார்கள். திராவிடர் கழகத்தின் சார்பாக வாழ்த்துப்பத்திரம் ஒன்றும் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

o o

6-2-46 சாத்தூர் நாடார்கள் ஐஸ்கூல் புதுக்கட்டிடத்தை தோழர் ராவ்சாகிப் பெ. சி. சிதம்பரநாதன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். ஊர்வலமும், பொதுக்கூட்டமும் மாலையில் நடைபெற்றது. பல சங்கங்களின் சார்பாக வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன.

## நினைவு நாள்

பொன்மலை தோழர் அம்மையப்பன் வாழ்க்கைத் துணைவியார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 13-1-46 காலை, திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் புலவர் குழந்தையா அவர்கள் தலைமையில் "நினைவு நாள்" நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

## சீர்திருத்த நாடகங்கள்

திலக்கோட்டையில் 4-2-46ல் "லட்சுமிகாந்தன்" என்னும் நாடகமும், 10-2-46ல் "போர்வாள்" நாடகமும் திராவிட மறுமலர்ச்சி இலவச வாசகசாலை நிதிக்காக திராவிட மறுமலர்ச்சி நாடக சபா, எம். ஆர். ராதா, எம். ஆர். மங்கலம் பார்ட்டியாரால் மிக சிறப்பாக நடைபெற்றது. தோழர் எம். ஆர். ராதா அவர்களுக்கு ஷை வாசகசாலையாரால் ஒரு வெள்ளிவாள் பரிசளிக்கப்பட்டது. மற்றும், சின்னாளபட்டி திராவிடர் கழகத்தாரால் வாழ்த்து வாசித்தளிக்கப்பட்டது.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.